தமிழ்நாடு அரசு

# இந்து சமய அறநிலையத்துறை

**இணை ஆணையர் அலுவலகம்**, 20-எப் சின்னமுத்து வீதி, ஈரோடு – 638 001.

சுதந்திரத்திருநாள் அமுதப் பெருவிழா

# வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு

கட்டு எண்.832/2021/அ2/நாள் : 25.02.2022

ஈரோடு, இந்துசமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும். பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| **பணியின் பெயர்** | **அலுவலக உதவியாளர்** | |
|---|---|---|
| பணியிடம் | இணை ஆணையர் அலுவலகம், ஈரோடு. | |
| சம்பள விகிதம் | நிலை –1 ரூ.15,700 – ரூ.50,000 | |
| குறைந்தபட்ச கல்வித்தகுதி | 8-ம் வகுப்பு தேர்ச்சி | காலியிடங்கள் |
| இட ஒதுக்கீடு (காலியிடங்கள் 3) | 1) பொதுப்போட்டி முன்னுரிமை பெற்றவர் (General Priority) | 1 |
| | 2) ஆதிதிராவிடர் (அருந்ததியினர் ஆதரவற்ற விதவை) முன்னுரிமை பெற்றவர் (SCADW) (Priority) | 1 |
| | 3) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் முன்னுரிமை பெற்றவர் (Most Backward Classes and Denotified Communities (Priority) | 1 |
| மொத்த பணியிடங்கள் | | 3 |

| **பணியின் பெயர்** | **இரவுக்காவலர்** | |
|---|---|---|
| பணியிடம் | இணை ஆணையர் அலுவலகம், ஈரோடு. | |
| சம்பள விகிதம் | நிலை –1 ரூ.15,700 – ரூ.50,000 | காலியிடங்கள் |
| குறைந்தபட்ச கல்வித்தகுதி | 8-ம் வகுப்பு தேர்ச்சியின்மை மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராகவும், நல்ல உடல் தகுதியுடனும் இருக்க வேண்டும். | |
| இட ஒதுக்கீடு (காலியிடம் – 1) | பொதுப்போட்டி முன்னுரிமை பெற்றவர் (General Priority) | 1 |
| மொத்த பணியிடம் | | 1 |

| **பணியின் பெயர்** | **ஓட்டுநர்** | |
|---|---|---|
| பணியிடம் | இணை ஆணையர் அலுவலகம், ஈரோடு. | |
| சம்பள விகிதம் | நிலை –8 ரூ.19,500 – ரூ.62,000 | காலியிடங்கள் |
| குறைந்தபட்ச கல்வித்தகுதி | 8-ம் வகுப்பு தேர்ச்சி (LMV License with Batch நல்ல உடல் தகுதியுடனும் இருக்க வேண்டும்.) | |
| இட ஒதுக்கீடு (காலியிடம் – 1) | பொதுப்போட்டி | 1 |
| மொத்த பணியிடம் | | 1 |

| 01.07.2021-ல் வயது வரம்பு | SC / ST | GT | MBC/DNC | BC |
|---|---|---|---|---|
| அதிகபட்ச வயது | 37 | 32 | 34 | 34 |
| குறைந்தபட்ச வயது | 18 | 18 | 18 | 18 |
| அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு அனுமதிக்கப்படும் | | | | |

மேற்கூறிய தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் 30.03.2022 மாலை 5.30 மணிக்குள் கீழ்காணும் ஆவணங்கள் சான்றின் நகல்களுடன் விண்ணப்பத்தினை புகைப்படத்துடன் சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலை ஒட்டிய கவர் ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், கைபேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும், அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்வர் விண்ணப்பக்கவரில் "அலுவலக உதவியாளர்" பணியிடம் என்றும் / இரவுக்காவலர் பணியிடத்திற்கு "இரவுக்காவலர்" என்றும், ஓட்டுநர் பணியிடத்திற்கு "ஓட்டுநர்" என்றும் பணியிடம் குறிப்பிட்டு அனுப்பபடவேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய விபரங்கள் :** 1. விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) 2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி சான்று நகல் 3. பள்ளி மாற்று சான்று நகல்– 1) 4. சாதி சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது) 5.ஈரோடு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு எண், பதிவு சான்றின் நகல். 6.குடும்ப அடையாள அட்டை நகல் 7.முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certificate) 8.இதர தகுதிகள் ஏதுமிருப்பின் அதன் விபரம் மற்றும் நகல்கள். 9.சுயவிலாசமிட்டு தபால் தலையுடன் கூடிய உரை-1.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :**

இணை ஆணையர்,<br>
இந்து சமய அறநிலையத்துறை,<br>
20-எப், சின்னமுத்து வீதி,<br>
ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனை அருகில்,<br>
ஈரோடு – 638001.

**ஒம்/- கோ.செ.மங்கையர்க்கரசி,**<br>
இணை ஆணையர்,<br>
இந்து சமயஅறநிலையத்துறை,<br>
ஈரோடு.

வெ.ஆ.எண். 34/செ.ம.தொ.அ/ஒப்பந்தப்புள்ளி/2022. ஈரோடு. நாள் : 25.02.2022

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**